# "குறுந்தொகையில் மெய்ப்பாடுகள்"

*முனைவர் செ. சமாதான சரோஜாதேவி*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சி.எஸ்.ஐ.ஜெயராஜ் அன்னபாக்கியம் கல்லூரி
நல்லூர்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: செப்டம்பர்

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v10iS1-5212

## முன்னுரை

நம் மெய்யின்கண் தோன்றி வெளிப்படும் உணர்வுகள் மெய்ப்பாடு ஆகும். ஒருவர் சில காரணங்களால் தம் மனதின் உணர்வுகளைப் பிறருக்கு எடுத்துக்காட்டாத பொழுதும் அவரை கூர்ந்து நோக்கினால் அவரின் உள்ளக் கிடங்கை நடவடிக்கைகள் மூலமும், முகக் குறிப்பின் வழியும் இன்னது தான் என்று உய்த்துணர முடியும். இவ்வாறே சங்க இலக்கியக் குறுந்தொகை நூலில் உள்ள மெய்ப்பாடுகளைத் தொல்காப்பியரின் வழி அறிதலே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குறுந்தொகை நூல் வரையறை

இந்நூலினைப் புரிக்கோ என்பவர் தொகுப்பித்துள்ளார். 400 ஆசிரியப்பாக்களை உடையது இதன் பாக்கள் 4 முதல் 8 அடி வரை அமைந்துள்ளன. சங்க இலக்கியங்களுள் குறுந்தொகைப் பாடல்களே மிகுதியாக உரையாசிரியர்களால் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. 205 புலவர்கள் குறுந்தொகைப் பாடல்களைப் பாடியுள்ளனர். குறுந்தொகைப் பாடல்களில் வாழ்வியல் உள்ள மெய்ப்பாடுகளை வெளிப்படுத்தியுள்ள நிகழ்வுகளைக் காண முடிகின்றது.

## மெய்ப்பாடு விளக்கம்

மெய்ப்பாடு என்பது மெய்யின் கண் தோன்றும் தன்மை மெய் - தேகம், மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடு ஆயிற்று என்பர் இளம்புரணர்.

**"நகை அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று**
**அப்பால் எட்டும் மெய்ப்பாடு என்ப."**

**(தொல். பொருள். நூ. 247)**

மனித உடம்பில் தோன்றும் மெய்ப்பாடு களாக நகை அழுகை இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டையும் தொல்காப்பியர் சுட்டுகிறார். திருமகள் தமிழகராதி மெய்ப்பாடு என்பதற்கு உள்ளத்தின் நிகழ்ச்சி புறத்தார்க்கு வெளிப்படுத்துதல் என்று பொருள் விளக்கம் தந்துள்ளது. ஆக இதனை வைத்து நோக்கும் போது மெய்ப்பாடு தோன்றுவதற்கும் வெளி ப்பாட்டு கருவியாக அமைவது மனித உடம்பு என்பது புலனாகிறது.

## நகை மெய்ப்பாடு

நகை என்பதற்குப் பொதுவாக சிரிப்பு என்று பொருள்படும். அவை எள்ளல், இளமை பேதமை, மடமென்று நான்கு வகை நிலைக்களங்களிலும் வெளி ப்படும் எனத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். குறுந்தொகையில் காமம் மிக்க கழிபடர்க் கிழவியால் பொழுது கண்டு சொல்லியது தலைவி தலைவனிடம் பறவைகள் காதல் செய்து இன்புற்று பிள்ளைப்பேறு எய்தி தம் குஞ்சுகளை இனிது பாதுகாப்பது போலத் தானும் தலைவனை மணம் முடித்து மகப்பேறு எய்தி பாதுகாத்து மகிழ்தல் வேண்டும் எனத் தலைவி விரும்பினாள் புறத்தே நிகழும் காம நிகழ்ச்சிகள் பறவைகளின் வாயிலாக எள்ளல் சுவையாக உணர்த்தப்பட்டுள்ளது. இதனை,

> ***"ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து***
> ***அறியதாமே - கொடுஞ்சிறைப் பறவை***
> ***இறைஉற ஓங்கிய நெறி அயல் மராஅத்தா***
> ***இறை கொண்டமையின் விரையுமடால்***
> ***செலவே"***
>
> ***(குறுந். 92)***

என்ற பாடலால் அறியலாம் பறவைகளின் செயலை அறியாமையுடையனவாக்கித் தம் தலைவன் மிக அறிந்தவன் என எள்ளல் குறிப்பால் கூறியதாகப் பொருள் கொள்ளுதல் வேண்டும். காலம், இடம் தெரிதலும், பிள்ளையை ஊட்ட அன்பின் விரைதலும் பறவையின் அறிவுடைமையைக் காட்டும்.

## அழுகை மெய்ப்பாடு

அழுகை என்ற சொல்லுக்குத் திருமகள் தமிழகராதி "நெஞ்சின் துயர்" தாளாது கண்களில் "நீர் சொறிதல்" என்ற பொருள்களினைத் தந்துள்ளது.

> ***"இழிவே இழவே அசைவே வறுமையென்***
> ***விளிவில் கொள்கை அழுகை நான்கக".***
>
> ***(தொல்.நூ.248)***

என்பதை தொல்காப்பியர் நான்கு வகையான அழுகை மெய்ப்பாடு தோன்றும் என்கிறார். அழுகை என்பது நகை என்பதின் எதிர்ப்பதம் என்கின்றார். இழிவு என்பது ஒரு பொருளையோ உயிரையோ இழிபடுத்துதல் ஆகும். தலைவன் பிரிவால் தலைவிக்கு பசலை ஏற்படுதலைக் கூறப்பட்டுள்ளது.

> ***"கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது.***
> ***நல் ஆன் தீம்பால் நிலத்து உக்கா அங்கி,***
> ***எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது,***
> ***பசலை உணீஇயர் வேண்டும்.***
> ***திதலை அல்குல் என் மாமைக் களினே"***
>
> ***(குறுந். 27)***

என்ற பாடலில் வெள்ளி வீதியார் கூறுகிறார் கன்று உண்டற்கே உரிய ஃ பால். ஆதலின் உண்டு எஞ்சிய பாலைக் கலத் தில் கொள்வர் பாலைச் சிந்தி மண்ணில் கெடுதல் செய்வதில்லை அதுபோல உவமை மூலம் தலைவியின் நலம் பாலினைப் போல தலைவன் நுகர்ந்து வரைவு கடாய வேண்டும். இளமை கழிந்து பயனற்றது ஆகிவிடக் கூடாது என்ற அவலத்தை அழுகையைத் தலைவன் வரைகடாவ வராத நிலைக் கூறப்பட்டுள்ளது.

## இளிவரல் மெய்ப்பாடு

> ***"மூப்பே பிணியே வருத்த மென்மையோடு***
> ***யாப்புற வந்த இளிவரல் நான்கே"***
>
> ***(தொல். நூ.248)***

என்பதைத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். பரத்தையரை அடைய நினைக்கும் தலைவனின் வேட்கை மிகுதியைச் சுட்ட அவன் விரைந்து செல்லும் தேரில் சென்றமை கூறப்பட்டுள்ளது. அவர்கள் தன்னுடைய தகுதியை அறிய வேண்டும் என்பதற்காகத் தேரினை ஒப்பனை செய்து சென்றனன் என்பதை ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலையை மறப்பது வருத்தத்தை தருவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

***"காலை எழுந்து கடுந்தேர் பண்ணி***
***வால்இழை மகளிர்த் தழீஇய சென்ற***
***மல்லல் ஊரன் எல்லினன் பெரிது என***
***மறுவரும் சிறுவன் தாயே***
***தெறுவது அம்மா இத்திணைப் பிறத்தலே"***

***(குறுந்.45)***

தலைவியின் முன்னர் பரத்தையர் செய்த அடையாளங்களுடன் தோன்றுதல் அவளுக்குப் பிரிவுத் துன்பத்தை விட மிகவும் வருத்தத்தைத் தருவது என உணர்த்தினாள். உயர் பிறப்பு இத்தகைய இழிவுகளை எல்லாம் பொறுத்துக் கொள்ளாது என்பது தலைவனுக்கு உணர்த்தப்பட்டது. பரத்தையிற் பிரிந்த தலைவன் தனக்கு ஆண் மகவு பிறந்தது அறிந்து காணவருதலும், இல்லறை மகளிர் தம் தலைவரின் செயல் மறந்து ஏற்றுக் கொள்ளும் உலகியல்பும் கூறப்பட்டுள்ளது.

### மருட்கை மெய்ப்பாடு

***புதுமை பெறுமை சிறுமை ஆக்கமொடு***
***மதிமை சாலா மருட்கை நாள் கே***

***(தொல்.நூ. 248)***

மேற்கூறப்பட்டவைகளைநிலைக்களமாகக் கொண்டு மருட்கை தோன்றும் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

தலைவன் தலைவியின் இல்லத்து அருகே சிறைப்புறமாக வந்து நின்றனன். தோழி தலைவியை அவன் மணம் செய்து கொள்வதற்காக அவன் இயல்புகளை இகழ்ந்து கூறிய வழி தலைவி தலைவன் இயல்புகளைப் புகழ்ந்து கூறுதல் இப்பாடலில் புதுமையானதாகம்.

***நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று***
***நீரினும் ஆர் அளவின்றே - சால்***
***கருங்கோற் குறிஞ்சிப் புக்கொண்டு***
***பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே***

***(குறுந்.3)***

இப்பாடலில் வண்டு குறிஞ்சிப் புக்களைக் கொண்டு பெருந்தேன் இழைத்தாற்போல வழிமுறையால் பெருக வேண்டி நட்பு அன்றே நிலத்தின் அகலம் போலவும், வானின் உயர்ச்சி போலவும், கடலின் ஆழம் போலவும் ஒரு வகையில் பெருகிற்று என்பதை மருட்கை என்னும் மெய்ப்பாடு கூறுகின்றது.

### அச்சம் மெய்ப்பாடு

***அணங்கே விலங்கே கள்ளவர்தம் இறையெனப்***
***பிணங்கல் சாரா அச்சம் நான்கே***

***(தொல்.நூ.249)***

அணங்கு, விலங்கு, கள்வர் ஆகியவற்றின் வழி அச்சம் தோன்றும் என்கிறார் தொல்காப்பியர்.

தலைவி தலைவன் இரவுக்குறியில் வருவதால் இடி, மழை, காற்று ஆகியவற்றால் வரும் ஏதங்கள் குறித்து அஞ்சுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

***"நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்***
***கடுவிசை உருமின் கழறுகுழல் அளைஇக்***
***காலொடு வந்த கமஞ்சூல் மாமழை!***
***ஆர் அளி இலையோ நீயோ பேர் இடர் இசை***
***இமயமும் துளக்கும் பண்பினை***
***துணை இலர், அளியர் பெண்டிர் இஃது***
***எனவே?"***

***(குறுந்.158)***

இரவுக்குறி வந்த தலைவனிடம் தோழி அருள் உள்ளம் உடைய வலியவனாகிய நீ மெலியவர்களை நலிவது அறமாகுமா என்றால் அச்சம் உடைய இவ்விரலில் வராது மனம் முடிக்க வேண்டுகிறாள் தோழி. பெருமிதம் மெய்ப்பாடு.

### பெருமிதம் மெய்ப்பாடு

***"கல்வி தறுகண் இசைமை கொடை எனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"***

***(தொல்.நூ.249)***

தம்முடைய அல்லது பிறனுடைய தகுதிகளின் நிறைவைப் பெருமையுடன் பிறருக்கு உணர்த்தும் பெருமிதம் ஆகும்.

***"அரில்தவப்பிரம்பின்கெண்டைதுதூஉம்
தன்துறை ஊரன் பெண்டினை ஆயின்
பல ஆகுக நின் நெஞ்சில் படரே!
ஓவாது ஈயும் மாரி வண்கை
கடும் பகட்ட யானை நெடுந்
கொன்முறை இரவுஊர் போலச்
சில ஆகுக நீ தஞ்சும் நாளே"***

***(குறுந்.91)***

கடையேழு வள்ளல்களில் ஒருவன் அதியமான் அஞ்சி, இவன ஊர் தகடூர் ஆகும். ஔவையாரைப் புகழ்ந்து போற்றியவன்.

அஞ்சியின் பகைபுலத்து இரவு ஊர் போல நின் நெஞ்சில் படர் பல ஆகுக. நீ துஞ்சும் நாள் சில ஆகுக. என கொண்முனை இரவு ஊர்போல என்ற உவமை ஈரிடத்தும் கூட்டிப் பொருள் உரைக்கப்பட்டது- நெஞ்சில் படர் பலவாயவழி தஞ்சும் நாள் சில ஆதல் இயல்மே ஆகும். இப்பாடலில் அதியமானின் வீரம் கொடை என்ற மெய்ப்பாடு கூறப்பட்டுள்ளது.

### வெகுளி மெய்ப்பாடு

வெகுளி, என்பதற்குச் சினம், வெறுப்பு, கபடமில்லாதவர் என்ற பொருளைத் தமிழகராதி தருகின்றது. தொல்காப்பியம் உறுப்பறை, குடிக்கோள், அலை கொலை என்ற நான்கை அடிப்படையாகக் கொண்டு வெகுளி தோன்றும் என்கின்றார் இதனைக் நற்தொகையில்

***"வெனிற் பாதிரிக் கண்மலர் அன்ன
மயிர் ஏற்பு ஒழுகிய அம்கமலும் மாமை
நுண்புண் மடந்தையைக் தந்தோய் போல்
இன்துயில் எடுப்புதி கனவே
எள்ளார் அம்ம! துணைபிரிந்தோரே"***

***(குறுந்.147)***

கானலே வேனிற்காலத்தில் மலரும் பாதிரி மரத்தின் இதழ்கள் உட்புறம் வளைந்த புவின் உள்ள மயிரினைப் போன்று அழகு ஒழுகும் மாமைநிறமும் நுண்ணிய வேலைப்பாடுடைய அணிக லன்களையும் உடைய தலைவியைக் கொண்டு வந்து தந்தது போல இனிய துயிலினின்றும் எழும்புகின்றாய் தம் துணையைப் பிரிந்தோர் உன்னை இகழார் என வெகுளியாகக் கூறப்பட்டுள்ளது.

### உவகை மெய்ப்பாடு

செல்வம், உடைமை, புணர்வு விளையாட்டு ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றும்.

தம் வீரத்தால் தலைவியைப் பற்றிய சிந்தனை தோன்றாமலிருந்தாலும் பல்லியின் துணையை அழைக்கும் குரல் கேட்டு நினையாமல் இரார் என்ற குறிப்பு இப்பாடலில் உணர்த்தப்பட்டுள்ளது.

***"உள்ளார் கொல்லோ தோழி கள்வர்
பொன்புனை பகழி செப்பம் கொண்டமார்
உசீர் நுதி புரட்டு ஓசைபோல
செங்காற் பல்லி தன்துணை பயிரும்
அங்காற் கள்ளி அம் காடு இறந்தோரே"***

***(குறுந்.16)***

இப்பாடலில் பல்லி தன்னுடையை துணையை அழைக்கும் ஒலியைத் தன் மனையிடத்துப் பலகால் கேட்டவர் ஆதலின் இடைச்சுரத்தில் பல்லி எழுப்பும் ஒலியின் வேறுபாடு உணர்ந்து உறுதியாகத் தம்மை அடைவர் என்ற குறிப்பும் நம்பிக்கையும் உவகையும் இப்பாடலில் புலப்படுகின்றது.

### முடிவுரை

மெய்ப்பாடு என்பது நம் மெய்யின் கண் தோன்றும் தன்மை இதனைத் தொல்காப்பியர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை அச்சம், பெருமிதம் வெகுளி உவகை என்ற வகையில் அடக்குகின்றார்.

குறுந்தொகைப் பாடலில் வாழ்வியல் முறைகள் பண்பாடு, கல்வி, வீரம், மணம், விளையாட்டு போன்ற மெய்பாடுகள் அடங்கிய வாழ்க்கைத் தத்துவப் பாடல்களை மக்கள் இன்றும் என்றும் இன்புறும் வகையில் அமையப்பட்டுள்ளமையைக் காண முடிகின்றது.

**பார்வை நூல்கள்**

*1. இளம்புரணார், தொல்காப்பியம் செய்யுளியல்.*

*2. திருமகள், தமிழகராதி ப.892.*

*3. வ.த.இராமசுப்பிரமணியம் உளவியல் சிந்தனைகள் ப.798.*